[2014 ஆகஸ்ட் 8

378—

பகுதி நேர நியாய விலைக் கடை

**19583—திரு. இரா. குமரகுரு:*

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, பே. குச்சிப்பாளையம் மற்றும் கொ. குச்சிப்பாளையம் ஆகிய கிராமங்களில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உளுந்தூர்பேட்டை தொகுதி, பேரங்கியூரில் செயல்பட்டுவரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க முழு நேர நியாய விலைக் கடையில் 803 குடும்ப அட்டைகளுடன் 62 குடும்ப அட்டைகளை உடைய பே. குச்சிப்பாளையம் கிராமம் இணைக்கப்பட்டுள்ளது. பகுதி நேரக் கடை துவங்குவதற்குக் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்று அரசு விதிமுறை இருக்கிறது. இந்நேர்வில் அது பூர்த்தியாகவில்லை. எனினும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கே. குச்சிப்பாளையம் கிராமத்திற்கும் பேரங்கியூரில் உள்ள தாய்க் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டராக உள்ளதால், அரசு விதிமுறைகளுக்குட்பட்டும், குடும்ப அட்டைதாரர்களுக்குள்ள சிரமத்தைத் தவிர்க்கும் வகையிலும், 62 குடும்ப அட்டைகளைக் கொண்ட கே. குச்சிப்பாளையம் கிராமத்திலும், அதன் அருகே 1½ கி.மீ. சுற்றளவில் அமைந்துள்ள கிராமங்களிலிருந்தும், மேலும் 88 குடும்ப அட்டைகளை பேரங்கியூர் தாய்க் கடையிலேயிருந்தும் பிரித்து, ஏதாவது ஒரு மையப் பகுதியாக அமைந்துள்ள இடத்தைத் தெரிவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அவ்விடத்தில் 150 குடும்ப அட்டைகளுடன் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள மற்றொரு பகுதி நேரக் கடையான கொ. குச்சிப்பாளையம் கிராமத்தில் உள்ள 158 குடும்ப அட்டைகளைப் பிரித்து, பகுதி

2014 ஆகஸ்ட் 8]

நேர நியாய விலைக் கடை அமைக்கும்போது, தாய்க் கடையில் 462 குடும்ப அட்டைகள் மட்டுமே மீதம் இருக்கும். எனவே, தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் மீதம் இருக்க வேண்டுமென்ற அரசு விதிமுறைகள் பூர்த்தியாகவில்லை. எனினும், தாய்க் கடைக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் பகுதி நேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1½ கி.மீ. என்பதால், தாய்க் கடைக்குத் தேவைப்படும் 38 குடும்ப அட்டைகளை அருகில் உள்ள ஏதாவது ஒரு அங்காடியுடன் இணைத்து, 500 குடும்ப அட்டைகளுடன் தாய்க் கடையையும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை 150 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான உத்தரவினைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று, விதி 110-ன்கீழ் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் புதியதாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க ஆணையிட்ட மாண்புமிகு அம்மா, எங்களின் குல தெய்வமே! ஏழைகளின் பொற்காலமே! விவசாயிகளின் விடிவெள்ளியே! ஒவ்வொரு நாளும் மக்கள் நலம் காக்கின்ற முத்தானத் திட்டங்களை வாரி வாரி வழங்கி, தமிழகம் காக்கும் தமிழகக் குலசாமி! (மேசையைத் தட்டும் ஒலி) கண் இமை சேராமல் உழைக்கின்ற காவியமே! அள்ளித் தரும் ஆலயமே! விவசாயிகள் தழைத்தோங்க காவேரி, முல்லைப் பெரியாரை மீட்டெடுத்து, கறவை ஆடு, மாடு தந்து, ஏழை விவசாயக் குடும்பங்களின் வாழ்வில் ஒளி விளக்கேற்றி வைத்த தமிழகத்தின் தங்கத் தாரகையே! தங்களின் பொற்பாதங்களுக்கு என் சார்பாகவும், உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட சிறுகல் ஒன்றியத்திலே,

பேரங்கியூர் குச்சிப்பாளையம் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை வேண்டுமென்று கேட்டிருந்தேன். அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக இந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். குச்சிப்பாளையத்திலிருந்து பேரங்கியூருக்குத் தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து வந்துதான் அவர்கள் பொருட்களை வாங்கக்கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே நல்ல பதிலைத் தந்திருக்கிறார்கள். அங்கே விதிமுறைகளுக்குட்பட்டு இல்லாமல் இருந்தாலும், பேரங்கியூர் குச்சிப்பாளையத்திலே இருக்கின்ற அருகில் உள்ள பழைய கடையைச் சேர்த்து, அங்கே கடை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்றுக் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மிகவும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

அதேபோல, கொரட்டூர் குச்சிப்பாளையத்தில் இருக்கின்ற மக்களும் நீண்டநாள் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று அங்கேயும் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற இந்தப் பகுதி நேர நியாய விலைக் கடையை உருவாக்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, இன்னும் எவ்வளவு நாளிலே பகுதி நேர நியாய விலைக் கடையை அமைத்துக் கொடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரே கேள்வியில் இரண்டு பகுதி நேர நியாய விலைக் கடைகள் கேட்டிருந்தார்கள். இரண்டு கடைகளையும் ஆய்வு செய்து, அதற்குரிய வாய்ப்புகளோடு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருக்கிறேன். அந்த நடவடிக்கைகள் விரைவிலே மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் 34 பகுதி நேர அங்காடிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. அதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உளுந்தூர்பேட்டை தொகுதியில் மட்டும் 8 பகுதி நேர அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரங்கியூர் குச்சிப்பாளையத்திற்கும், கொரட்டூர் குச்சிப்பாளையத்திற்கும் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன் என்று சொல்லியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதியிலே குன்னத்தூரிலிருந்து, குன்னத்தூர் காலனிக்கும், சீதேவியிலிருந்து, சீதேவி சவுரியார்புரத்திற்கும், பரிந்தலிலிருந்து, பரிந்தல் மேட்டுக் காலனிக்கும், எலவனாசூர்கோட்டையிலிருந்து ரஹ்மான் தர்க்காவிற்கும், பின்னல்வாடியிலிருந்து பின்னல்வாடி காலனிக்கும், குணமங்கலத்திலிருந்து குணமலங்கலம் முஸ்லிம் தெருவிற்கும், நாச்சியார்பேட்டையிலிருந்து நாச்சியார்பேட்டை மேட்டிற்கும், பிள்ளையார் குப்பத்திலிருந்து பரமநத்தத்திற்கும், உடையானத்தத்திலிருந்து வைப்பாளையத்திற்கும், திருமுண்டீஸ்வரத்திலிருந்து சாராயமேட்டிற்கும், கன்னாரம்பட்டிலிருந்து கன்னாரம்பட்டு காலனிக்கும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. குமரகுரு: ஆமூரிலிருந்து ஆமூர் காலனிக்கும் புதிதாக பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட பட்டியலை அடுக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகின்ற தமிழக அரசு மட்டும்தான் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பைக் கொடுத்து கொண்டிருக்கிறது. அப்படிக் கொடுத்துக் கொண்டிருக்கிறவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் தொகையில் அதிகமாக இருக்கிற மகாராஷ்டிராவில் 318 கோடி ரூபாய்தான் ஒரு ஆண்டிற்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. அதேபோல, மேற்கு வங்காளத்தில் ரூபாய் 2,169 கோடிதான் உணவு மானியமாக வழங்குகிறார்கள். ஒன்றுபட்ட ஆந்திராவில் ரூபாய் 3,706 கோடிதான் வழங்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்குகிற தொகை எவ்வளவு என்று சொன்னால், ஆண்டிற்கு 5,300 கோடி ரூபாய் உணவு மானியத்திற்கென்று வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடிட்டுக்காட்டிய அந்த ஊர்களில் எல்லாம், தேவையின் அடிப்படையில், ஆய்வின் அடிப்படையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 379, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.